கனம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்.

முன்னிலை : திரு. E.மணிகண்டன், B.A., B.L.,
கூடுதல் மாவட்ட உரிமையில் நீதிபதி,
திருமங்கலம்.

2025ம் வருடம் அக்டோபர் மாதம் 6ம் தேதி திங்கட்கிழமை
இடைநிலை மனு எண்.1/2020
இன்
அசல் வழக்கு எண்.185/2019
* * * *

மோகன் ... மனுதாரர்/3ம் பிரதிவாதி

/எதிர்/

1. முருகராஜன் ... 1ம் எதிர்மனுதாரர்/ வாதி
2. மாவட்ட ஆட்சியர்,
   மதுரை மாவட்டம்
3. சார்பதிவாளர்,
   திருப்பரங்குன்றம், மதுரை
4. கண்ணப்பன்
5. மீனாட்சி சுந்தரம்
6. சுப்பிரமணியன் ... 2 முதல் 5 எதிர்மனுதாரர்கள்/
   1, 2, 4 முதல் 6 பிரதிவாதிகள்

இறுதியாக இம்மனு 23.09.2025ல் இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 1ம்

எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.N.நமசிவாயம் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள்/4 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைக்கு போதிய வாய்ப்பளித்தும், வழக்காவணங்களை பரிசீலனை செய்து இந்நீதிமன்றம் இன்று திறந்த நீதிமன்றத்தில் பிறப்பிக்கும்...

<u>**உத்தரவு**</u>

இம்மனுவானது அசல் வழக்கினை நிராகரிக்க வேண்டி மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் கட்டளை 7 விதி 11ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>**1. தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா என்பதேயாகும்.**</u>

மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பு மனு, எதிருரை மற்றும் வழக்கு ஆவணங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டது. மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளது.

1ம் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில், மனுதாரர்/3ம் பிரதிவாதியின் மனுவினை ஆட்சேபித்து எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.1) மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்று பரிசீலனை செய்கையில், அசல் வழக்கானது 19.04.1996ம் தேதியிட்ட கிரையப்பத்திரமான 976/1996 ஆனது செல்லத்தக்கதல்ல என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் தொடர்ச்சியாக தாவாச்சொத்தினை பொறுத்து பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித உருமாற்றமும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் வாதியால் பிரதிவாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், மேற்படி அசல் வழக்கினை நிராகரிக்கவேண்டி இம்மனுவானது மனுதாரர்/3ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.2) மேலும், வாதியின் அசல் வழக்கானது காலவரையறைச்சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாலும், அசல் வழக்கின் பிராதானது வழக்கு மூலத்தினை முறையாக பிரதிபலிக்காததாலும், அசல் வழக்கானது கட்டளை 7 விதி 11ன் கீழ் நிலைநிற்கத்தக்கதல்ல என்று மனுதாரர்/3ம் பிரதிவாதியின் தரப்பில் வாதிட்டபட்டது, இந்நிலையில், அசல் வழக்கானது விசாரணைக்கு முன்பே நிராகரிக்கப்படவேண்டியதா? என்று பரிசீலிக்கையில்,

**P. Kumarakurubaran Vs., P. Narayanan and others**
**Civil Appeal No.5622/2025**
**Dated:29.04.2025**

... என்ற மாண்பமை இந்திய உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின் பக்கம் 15 பாரா 12ல்

**"12. Again as pointed out by a three-Judge Bench of this Court in Chhotanben v. Kiritbhai Jalkrushnabhai Thakkar [(2018) 6 SCC 422 : (2018) 3 SCC (Civ) 524], the plea regarding the date on which the plaintiffs gained knowledge of the essential facts, is crucial for deciding the question whether the suit is barred by limitation or not. It becomes a triable issue and hence the suit cannot be thrown out at the threshold.."** என்று கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், அசல் வழக்கானது வெளிப்படையான விஷயங்களை முறையாக கொண்டதாக தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றும், அசல் வழக்கானது முறையான காலவரையறைச்சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்று இருதரப்பு விசாரணைக்கு பின்னர் தான் தீர்வு காணமுடியும் என்ற சூழ்நிலையிலும், மேற்படி இந்திய உச்சநீதிமன்ற முன்தீர்ப்பின் வழிகாட்டுதலின்படியும், கட்டளை 7 விதி 11ன் கீழ் கூறப்பட்டுள்ள சரத்துக்களுக்கு முரண்படாக அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக மனுதாரர்/3ம் பிரதிவாதி தரப்பில் சட்டப்படியான

ஏற்புடைய ஆவணங்களை தாக்கல் செய்து நிரூபணம் செய்யாத நிலையிலும், இம்மனுவில் மனுதாரர்/3ம் பிரதிவாதி கூறும் சங்கதிகளை மட்டும் வைத்து அசல் வழக்கு சட்டப்படியாக நிலைநிற்கத்தக்கதல்ல என்று தீர்மானிக்க இயலாது என்று இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு மனுதாரர்/3ம் பிரதிவாதியின் இம்மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படுகிறது.

**முடிவாக,** மனுதாரர்/பிரதிவாதியின் மனுவானது தள்ளுபடி செய்து இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த திறந்த நீதிமன்ற அவையில் 2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.06 16:10:27 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

**இணைப்பு:-**

**1. மனுதாரர் தரப்பு சாட்சிகள் : -** இல்லை

**2. மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-**

ம.சா.ஆ.1. மதுரை, முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தின்

உயில் மெய்ப்பிதழ் அசல் மனு எண்.1/2018ன் தீர்ப்பாணை – சான்றிட்ட நகல்

ம.சா.ஆ.2. 15.09.2014ம் தேதியிட்ட உயில் சாசனம் – சான்றிட்ட நகல்

ம.சா.ஆ.3. 18.03.1978ம் தேதியிட்ட கிரையப்பத்திரம் – நகல்

ம.சா.ஆ.4. சர்வே எண்.130/4ன் புலவரைபடம் – அசல்

**2. எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:** இல்லை

ESWARAN MANIKANDAN
Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.06 16:10:34 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருமங்கலம்.

இடைநிலை மனு எண்.01/2020
இன்
அசல் வழக்கு எண்.185/2019
வரைவு/செவ்வை உத்தரவு
நாள்: 06.10.2025